Secretary's Reference
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
25 NOV 1982
MADRAS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1982 மார்ச் 8.

துன்மதி, மாசி 24, திருவள்ளுவராண்டு-2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு

ஏர் உழுதலை விட எரு இடுதல் நல்லது. இந்த இரண்டும் செய்து களை நீக்கிய பிறகு நீர் பாய்ச்சுவதை விட காவல் காப்பது நல்லது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### தூத்துக்குடியில் அகர் அகர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

*வினா எண் 401—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அரசு தொடங்குவதாக இருந்த அகர் அகர் தயாரிக்கும் முன்னோடித் திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) அகர் அகர் தொழிற்சாலை முன்னோடித் திட்டமாக அரசால் நிறுவப்படுவதற்குள், பல தனியார் நிறுவனங்கள் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் கடற்பாசிகளின் மூலம் அகர் அகர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன. இந்நிலையில் முன்னோடித் திட்டமாக மின் துறை நிறுவ முற்படுவதால் அரசிற்கு நட்டமேற்படுமென முன்கூட்டியே உணரப்பட்டதால் இத் திட்டம் கைவிடப்பட்டது. இதற்காக வாங்கியுள்ள சாதனங்கள் மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அதை வாங்கிய விலைக்கே ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அகர்-அகர் தயாரிப்புத் திட்டம் முன்னாலே நம்முடைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் கடல் பாசியிலிருந்து அல்வா தயாரிக்கும் திட்டமாக அறிவிக்கப்பட்டது. இதை மூலப்பொருளாகக்கொண்டு, தனியார் துறையில் ஐஸ்கிரீம், ஜல்லி போன்ற பொருள்களைத் தயாரித்து, அதை லாப கரமான முறையில் நடத்தி வருகிறார்கள். அரசாங்கம் இதற்காக நிதி ஒதுக்கி, அதற்குத் தேவையான சாதனங்கள் வாங்கி, பணியாளர்கள் போட்ட பிறகு அதைக் கைவிடுவதற்கான காரணம் என்ன ? தனியார்கள் ஆரம்பித்து இருக்கிறார்கள் என்பதால் அரசாங்கம் அத் திட்டத்தைக் கைவிடுவது முறை யாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 3 டன் உற்பத்தித் திறன் உள்ள இயந்திரங்களை வைத்து, இந்த அகர் அகர் தயாரிக்கும் திட்டம் 1965-லேயே தீட்டப்பட்டது தான் என்றாலும், தூத்துக் குடி, கோவில்பட்டி, மதுரை ஆகிய இடங்களில் தனியார் துறையில் 70 டன் திறன் உள்ள அகர் அகர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைத் துவங்கி இருப்பதால், தனியார் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அரசுத் துறை யில் செலவு நிலைமை அதிகமாக ஆகும் என்பதால், அது துவக்கப்படாமல் இருந்து வந்தது. அப்படித் துவங்கினாலும் நஷ்டம் ஏற்படும் என்பதால், துவக்கி நஷ்டம் ஏற்படுவதை விட மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையம் அதை வாங்கிய விலைக்கே பெற்றுக்கொள்ள முன்வந்த காரணத்தால், அதற்கு அது விற்கப்பட்டு விட்டது. ஆகவே, இதனால் நஷ்டம் எதுவும் இல்லை. தனியார் இதை நடத்தி லாபம் அடையும் சூழ்நிலை இருக்குமானால், அரசு இன்றைக்கு அதைச் செய்யவேண்டும் என்பது இல்லை. தனியாருக்கே விட்டு விடலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல், இதற்கென நிதி ஒதுக்கீடு, பணியாளர்கள் நிய மித்தல், இயந்திரங்கள் வாங்குவதல் போன்றவை செய்தபின்னாலும், அந்தத் தொழிற்சாலை அதைத் தயாரிக்க முடியாததற்குக் காரணம், அதற்குத் சரியான பாய்லர் வாங்காதது என்றும், அதனால் தான் அது கைவிடப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது. இதைச் சரியாக வாங்கியிருந்தால் அது நிச்சயமாக லாபகரமாக இயங்கி இருக்கும் அல்லவா ? இதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் துவங்குவதாக இருந்ததால் அதற்கான இயந்திரங்கள் வாங் கப்பட்டன. ஆரம்பத்திலேயே துவங்கியிருந்தால் அது லாபகரமாக நடந்து

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்கான காரணங்கள் என்று அவர் சொன்னது பற்றிய விளக்கக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. 1965-லே வாங்கிய இயந்திரங்களுக்கு யார் பொறுப்பு என்று இப்போது 1982-லே கண்டுபிடிக்க ஆரம்பித்தால், அதற்காக ஆகும் செலவுத் தொகை, இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆன தொகைக்கு வந்து விடும். அப்போதே இதை ஆரம்பித்தால் நஷ்டம் வரும் என்று எண்ணி கைவிட்டு விட்டார்கள். இயந்திரங்கள் வாங்கியிருந்தாலும், அதனால் நஷ்டம் இல்லை. அந்த இயந்திரங்கள் வாங்கிய விலைக்கே விற்கப்பட்டு விட்டன.

பெரிய தாளையிலுள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்

*வினா எண் 402—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி பெரிய தாளையில் மீனவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கும் குடியிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது மின் இணைப்பு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மீனவர்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு அமைக்க வழி வகைகள் கிடையாது. வீடுகளுக்கான மின் இணைப்பை குடியிருப்பவர்களே அவர்களது சொந்த செலவில் செய்து கொள்கின்றனர்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, இந்த மீனவர் குடியிருப்பு கட்டப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் இந்த குடியிருப்புக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. நான் சென்ற ஆண்டு இந்தக் கேள்வியைக் கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு தெருவிளக்கு போன்றவற்றிற்குத்தான் மின்சாரம் கொண்டுவர ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது மின்சாரத் துறையினர் முயற்சி செய்வார்கள். அந்தந்த குடியிருப்புகளுக்கு மின்சாரம் பெறுவதற்கு வீடுகளில் குடியிருப்பவர்கள்தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS